Judicial Magistrate Trichy

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.VI,**

**Present : Thiru.M.S. Subramanian,B.B.A.,B.L.,**

Judicial Magistrate Court No.VI,
Tiruchirappalli.

**STC.No.67/2025**

Deposition of Witness: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வவிநாயகம் | Father Name | கலியபெருமாள் |
| Village | மேலகல்கண்டார்கோட்டை | Taluk | திருச்சி |
| Calling | | Age | 53/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969(Central Act 44 of 1969) on the day of .03.02.2026

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

1. நான் MCA படித்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகி ஒரு மகன் உள்ளார். தற்போது B.E படித்து கொண்டு வருகிறார். எனது மனைவி தற்போது வீட்டு குடித்தனம் தான். தற்போது எனக்கு பணி எதுவும் கிடையாது. எனக்கு நிரந்தரமான வருமானம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். கடந்த 2 1/2 வருட காலமாக எவ்வித பணியும் இல்லாமல் இருந்து வருகிறேன். கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலக்கட்டத்தில் நான் சென்னையில் பணிபுரிந்து வந்தேன். நான் CTS நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தேன். தோராயமாக அப்போது என் மாத வருமானம் ரூ. 1,00,000/- முதல் 1,20,000/- வரை பிடித்தம் போக நான் ஊதியம் பெற்று வந்தேன். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் விவரத்தையும் மற்றும் சென்னையில் பணிபுரிந்த விவரத்தையும் மற்றும் மாதம் ரூ. 1,00,000/- ஊ தியம் ஈட்டி வந்த விவரத்தையும் வழக்கு ஆவணங்களான சட்ட அறிவிப்பு, புகார், நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. எனக்கு மாதம் ரூ. 1,00,000/- முதல் 1,20,000/- வரை மாத வருமானம் ஈட்டி வந்தேன் என்பதை நிரூபிக்கும் வகையில் அதற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். எதிரியை எப்படி தெரியும் என்றால் கடந்த 2010-ம் ஆண்டு HEXAWARE என்ற நிறுவனத்தில் பணிபுரிந்தேன். அப்போது எதிரியும் அங்கு பணிபுரிந்ததால் எனக்கு தெரிய வந்தது. 2012-ம் ஆண்டு அந்த நிறுவனத்தில் இருந்து வெளியேறிவிட்டேன். 2012-ம் ஆண்டு நான் வெளியேறிய பிறகு நான் பணி செய்து வந்த CTS நிறுவனத்தில் எதிரி பணி செய்யவில்லை.

3. எதிரி அறிமுகமாகி நான் நிறுவனத்தில் இருந்து 2012-ல் வெளியேறி எட்டு வருடங்கள் கழித்து தான் எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படுவதுதான் என் தரப்பு வழக்கு என்றால் சரிதான். ஒருவரது மாத வருமானம், அவரது செலவினங்கள் போக மீதமுள்ள தொகையை கணக்கிட்டும், அதன் அடிப்படையில் கடனை திரும்ப செலுத்தும் திறன் முடிவு செய்து தான் கடன் கொடுப்போம் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு பண பரிமாற்ற தொகைக்கு முன்பாக எனக்கும், எதிரிக்கும் கடனோ, கொடுக்கல் வாங்கலோ இருந்ததா என்றால் இல்லை. கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் எதிரி எங்கு பணிபுரிந்தார் என்றால் HEXAWARE என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். அப்போது எதிரிக்கு எவ்வளவு மாத ஊதியம் இருக்கும் என்றால் எதிரி எனது Grade ஐ விட குறைவாக தான் பணிபுரிந்து வந்தார். அவரது மாத ஊதியம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது.

4. வழக்கு காசோலை தொகை எவ்வளவு என்றால் ரூ.45 லட்சம், அது அசல் தொகையாகும். என்னை பொறுத்த வரைக்கு அது பெரிய தொகை என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி அப்போது பணி செய்து வந்தாரா என்றால் அவர் அப்போது சென்னையில் உள்ள வேல்ஸ் கல்லூரியில் பணிபுரிந்து வந்தார். எதிரியை பொறுத்தவரை வழக்கு புகாரில் கண்டுள்ள தொகையானது பெரிய தொகை என்றாலும், அந்த தொகை வழக்கில் சொன்னப்படி கடனாக பெறவில்லை என்றாலும், எதிரிக்கு அந்த தொகையை திரும்ப செலுத்தும் திறன் அல்ல என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் சரியல்ல.

5. நான் எதிரிக்கு எத்தனை முறை கொடுத்தேன் என்றால் மூன்று முறை கொடுத்துள்ளேன். ஒரு முறை 2020-ம் ஆண்டிலும், மற்ற இருமுறை 2022-ல் கொடுத்துள்ளேன். 2020-ல் ஒரு முறை நான் எதிரிக்கு பணம் கொடுத்த விவரத்தையும், 2022-ல் நான் எதிரிக்கு பணம் கொடுத்த விவரத்தையும், வருமான வரி அலுவலகத்தில் Yearly Assessment-ல் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. Income Tax-ல் எதிரிக்கு பணம் கொடுத்த விவரத்தையும், ஏன் கொடுத்தேன் என்ற விவரத்தையும், ஏன் காண்பிக்கவில்லை என்றால் இந்திய வருமான வரி சட்டத்தில் அது போன்று சட்டவிதிகள் இல்லை. நான் சொல்வது போல் சட்ட விதிகள் இல்லை என்று சொல்வது தவறு என்றும், வருமான வரி துறையில் நான் வெளி நபர்களுக்கு பெரும் தொகையை கொடுக்கம் பட்சத்தில் அதற்கு உரிய கணக்கு காண்பிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

Judiciary Trichy

6. எனது நிரூபண வாக்குமூலம், புகார், வழக்கறிஞர் அறிவிப்பு எதிரி என்னிடம் எப்போது அணுகி பணம் கேட்டார் என்ற விவரம் எவ்வளவு கேட்டார் என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை வழக்கறிஞர் கேட்டதற்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

என்னால்/ என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் எழுதப்பட்டு, சாட்சிக்கு விளக்கப்பட்டு/படித்து காண்பிக்கப்பட்டு, அது சரியென வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

S/d., M.S. Subramanian
Tiruchirappalli.

Judicial Magistrate no. VI, Trichy